மின்னிதழ்

# தேசியம்

www.thesiyamnews.com

THESIYAM ජාතිකත්වය (as printed: THESIYAM තේසියම්)



சிறந்ததில் மிகச்சிறந்தது

OFFSET | DIGITAL | SCREEN PRINTING | CTCP PLATE MAKING | WEDDING CARDS

MATHI COLOURS

NO. 10, MURUGESAR LANE,
NALLUR, JAFFNA.
TEL : 021 222 9285
E-mail : mathicolours@gmail.com

CUSTOMER CARE
+94 77 722 2259



மலர்: 01 | குரல்: [illegible] | வள்ளுவர் ஆண்டு 2054 | ஞாயிற்றுக்கிழமை 31.12.2023 | பக்கங்கள் 10




# யாழ் ஆயர் 2024 புதுவருட வாழ்த்து!

2024ஆவது புதிய ஆண்டு மலருகின்ற வேளை உலகம் முழுவதிலும் இப்புத்தாண்டைக் கொண்டாடும் அனைவருக்கும் இப்புதிய ஆண்டு உங்கள் உள்ளத்து எண்ணங்கள் ஏக்கங்கள் எதிர்பார்ப்புக்கள் அனைத்தையும் நிறைவு செய்யும் இறை ஆசீர் மிக்க ஆண்டாக அமைய முதலில் வாழ்த்துகிறோம்.

பக்கம் 05

## கடல்சார் பாரம்பரியமே தலைவர் பிரபாகரனுக்குப் பேராண்மையைப் பெற்றுத் தந்தது!



பக்கம் 09

பொ.ஐங்கரநேசன் சுட்டிக்காட்டு!

## புலம்பெயர் தேச அமைப்புக்களின் எழுச்சி மீதான ரணிலின் யுத்தமா!



பக்கம் 06

## பீரிஸின் ராஜதந்திர செயற்பாடு! டலஸ் அணிக்குள் வெடித்தது பிளவு!





பக்கம் 03

**தேசியம்** பத்திரிகையின் மின்னிதழைப் பெற இவ் வாட்ஸ் ஆஃப் குழுவில் இணைந்து கொள்ளுங்கள்.

SCAN ME




# ஆசிரியர் பீடம்

தொலைபேசி : +94 76 567 3339
மின்னஞ்சல் : thesiyamnews@gmail.com
இணையம் : www.thesiyamnews.com


# தமிழரசுக்கட்சியின் புதிய தலைமை!

**வடக்கு கிழக்கு தமிழர்களுடைய அரசியல் வரலாறென்பது கொள்ளை ரீதியாகவும், கோட்பாடு மற்றும் நிலைப்பாடு ரீதியாகவும் சீராக கட்டமைக்கப்பட்டது.**

அவ்வாறே இதுவரை காலமும் முன்நகர்த்தப்பட்டுமிருக்கிறது எனக் கொண்டால் அதனை வழிப்படுத்துவதற்கான அரசியல் சரியான முறையில் செய்யப்பட்டாகவேண்டும். இருந்தாலும் தமிழர்களுடைய உரிமைகளுக்கான அவர்களுடைய கோரிக்கைகளுக்கான அரசியலை செய்கின்றனவா என்ற கேள்வி இந்த இடத்தில் எழுகிறது.

அவ்வாறில்லையானால், தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகள் தங்களை இந்த வரண்முறைகளுடன் முன்நகர்த்தவேண்டியது காலத்தில் கட்டாயமாகும். தமிழ்த் தேசிய அரசியலானது தமிழர்களுடைய அரசியல் அபிலாசைகளை நிறைவேற்றுவதற்காக வேயன்றி தனிப்பட்ட அரசியல்வாதிகளின் நலன் பேணுவதற்கானதாக இருக்கக்கூடாது என்பது இதன் அடிப்படையும் அடுத்தபடியுமாகும்.

அப்படியானால், வடக்கு, கிழக்கு மாகாண அலகானது மாகாணத்துக்குள் வாழும் அனைத்து இன, மத மக்கள் மத்தியிலும் சகவாழ்வு, இன, மத நல்லிணக்கம், ஒருமைப்பாடு, சகோதரத்துவம் ஆகிய நிலைபேறான விடயங்கள் இதில் முக்கியப்படும்.

தமிழ் மக்களின் இன முரண்பாட்டுச் சிக்கல் தோற்றம் பெற்றதுமுதல் பேரினவாதிகளுடன் கொள்கை ரீதியான பல விடயங்களில் உடன்பாடுகள், இணக்கப்பாடுகள் எட்டப்பட்டிருந்தாலும் ஒப்பந்தங்கள், பேச்சுவார்த்தைகளின் ஊடாக இதுவரையில் சீர்படுத்தப்படவில்லை என்பதே வரலாறு. ஆனால், தமிழ் மக்கள் ஏமாற்றப்பட்டதும், ஏமாந்ததும் காலங்காலமாக நடைபெற்று வந்திருக்கிறது.

நாட்டில் நடைமுறைப்படுத்தப்படும் சட்டங்கள், திட்டங்களையும் தமிழ் மக்களை மேலும் துன்பங்களுக்குள் தள்ளுவதாகவே அமைந்திருக்கிறது. மத்திய அரசானது, இலங்கை நாட்டு மக்கள் அனைவரினதும் ஜனநாயக வாழ்வு, இன நல்லிணக்கம், சகவாழ்வு, ஒருமைப்பாடு, சகோதரத்துவம் ஆகிய மனிதப் பண்புகளை கட்டியெழுப்புவதற்கான திட்டங்களை மேற்கொள்ள வேண்டும்.

ஆனால், இலங்கை சுதந்திரமடைந்நததுமுதல் தமிழ் மக்கள் எதிர்கொண்ட பாகுபாடுகள். இன்னல்கள் நெருக்கடிகள் காரணமாக தனித்து இருத்தலை அவர்கள் கைக்கொள்ளமுனைந்தனர். போராட்டங்களை நடத்தினர்.

இருந்தாலும், வடக்கு கிழக்கு மாகாணத்துக்கு ஐக்கிய இலங்கைக்குள் மீளப்பெறமுடியாத சமஷ்டி முறையிலான அதிகாரப் பகிர்வை வழங்குவதற்கு இலங்கை அரசுக்கு தேவையான ஒத்துழைபபுகளை வழங்க அயலிலுள்ள நட்புநாடான இந்தியாவையும், அமெரிக்கா, பிரித்தானியா, கனடா, ஜேர்மன், அடங்கலான மையக்குழு நாடுகளையும், ஐரோப்பிய ஒன்றியத்தையும், ஐ.நா.சபையையும் இப்போது கோரவேண்டிய நிலை ஏற்பட்டுவிட்டது.

உலகின் அரபு தேசத்தின் பாலஸ்தீனத்தில் இஸ்ரேல் தனது யுத்தத்தை நடத்துகிறது. ரஷ்யா உக்ரேன் மீது போர் தொடுத்திருக்கிறது. பெரும் பொர் நடந்து கொண்டிருக்கிறது. மிகக் கொழூரமான அழிவுகள் நடைபெற்றாலும் அது நிறுத்தப்படுவதற்கு வாய்ப்பற்றிருக்கிறது.

இலங்கையில் நடைபெற்ற ஆயத யுத்தம் மௌனிக்கச் செய்யப்பட்டுவிட்டது. அதனால் தமிழர்கள் தங்கள் போராட்டத்தை இராஜதந்திர ரீதியில் முன்நகர்த்தவேண்டிய கட்டாயத்துக்குட் படுத்தப்பட்டனர். இப்போது நடைபெற்றுக் கொண்டிருப்பது அதுதான். ஆனால், அதனை யார் சரியாகச் செய்கிறார்கள் என்று மக்கள் இதுவரை முடிவு எதனையும் கொடுக்கவில்லை.

தமிழர்களுடைய சுயநிர்ணயப் போராட்டமானது பல வடிவங்களிலும் நிகழ்த்தப்பட்டிருந்தாலும் ஆயுதப் போராட்ட அரசியலே உலகத்தினதும் சிங்கள தேசத்தினதும் கண்களைத் திறந்துவிட்டது என்று சொல்லமுடியும். இருந்தாலும் மிதவாத அரசியலையும் தமிழர்கள் கைக்கொள்ளாது விட்டுவிடவில்லை.

இருப்பினும் தமிழ் காங்கிரஸ், தமிழர் விடுதலைக் கூட்டணி, தமிழரசுக்கட்சி என மிதவாத அரசியலுடனும், ரெலோ, புளொட், ஈரோஸ், ஈ.பி.ஆர்எல்எவ், ஈ.என்.டி.எல்.எவ். என ஆயுத அரசியலுடனும் என தொடர்ந்த தமிழர்களுடைய விடுதலைக்கான முயற்சிகள் பலனற்றுப் போனதாகவே இருக்கின்றன.

தந்தை செல்வா முன்நகர்த்திய அரசியல் தமிழ்த் தேசிய அரசயலின் பால் நாகரீகமான, சுதந்திரமான அரசியல் நலனுக்கான முயற்சிகளையே அவர்கள் மேற்கொண்டிருந்தார். ஆனால், அவருடைய முயற்சி விட்டுச் சென்ற அரசயில் பணி கழுதை தேங்ந்து கட்டெறுப்பானதா இல்லையா என்பது மக்களுக்குத் தெரியாமலில்லை.

அப்படியானால் தமிழரசுக்கட்சியின் புதிய தலைவர் வெறுமனே, சர்வதேச தொடர்புகளைக் கொண்ட, மொழி அறிந்த என்று சொல்லும் கட்டுப்பாடுகளுக் குள் மட்டுப்படுமா.? ஆல்லது தமிழர்களுடைய அரசியல் சுதந்திரத்துக்காக நடைபெற்ற தமிழ்த் தேசியத்தின் பாற்பட்டதாக இருக்குமா?
பிறக்கும் புதிய வருடத்திலேனும் இது புலப்படட்டும்.!




# டெங்கு நோய் தாக்கம் தொடர்பில் விழிப்புணர்வு!

## யாழ் ஊடக அமையம் ஏற்பாடு!





யாழ் ஊடக அமையத்தின் ஏற்பாட்டில் தற்போது யாழ் மாவட்டத்தில் தீவிரமாக பரவி வரும் டெங்கு நோய்த் தாக்கம் பற்றிய விழிப்புணர்வுச் செயற் திட்டம் 29ம் திகதியிலிருந்து யாழ் நகர்ப் பிரதேசங் களுட்பட டெங்கு அபாய வலயப் பிரதேசங்களில் வழங்கி வைக்கப்படுகின்றது.

இவ் ஆரம்ப நிகழ்வில் வடமாகாண சுகாதாரப் பணிப்பாளரும், யாழ் போதனா வைத்தியசாலைப் பணிப்பளரமான த.சத்தியமூர்த்தி , யாழ் போதனா வைதியாசாலை பிரதிப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி நித்தியானந்தா , சுகாதாரத்துறையினர் மற்றும் ஊடகவியளாளர்கள் கலந்து கொண்டனர்.

விழிப்புணல்வுத் துண்டுப்பிரசுரங்ளை விநியோ கித்து மக்ளை விழிப்பூட்டும் இச் சமூகப் பணியா னது டெங்கு அபாயம் நிலவும் அபாய வலயங்க ளில் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது..





# பீரிஸின் ராஜதந்திர செயற்பாடு! டலஸ் அணிக்குள் வெடித்தது பிளவு!




ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாச, .ஜி.எல். பீரிஸ் இடையே புதிய அரசியல் கூட்டணிக்கான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இதன்படி, சுதந்திர மக்கள் பேரவையின் பல உறுப்பினர்கள் ஐக்கிய மக்கள் சக்தியுடன் கூட்டணி அமைத்துள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. ஐக்கிய மக்கள் சக்தியுடன் பரந்த கூட்டணி ஜனவரி 20ஆம் திகதி ஐக்கிய மக்கள் சக்தியுடன் பரந்த கூட்டணி உருவாக்கப்பட உள்ளதால், அன்றைய திகதியில் இது அறிவிக்கப்பட உள்ளது. சுதந்திர மக்கள் பேரவையில் பிளவு இந்நிலைமையால் சுதந்திர மக்கள் பேரவையில் பிளவு ஏற்பட்டுள்ளதாகவும் அதன் தலைவர் டலஸ் அழகப்பெரும மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு தனிமைப்படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

# சமகால அரசியல் உரையரங்கு! தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் ஏற்பாடு!

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் சமகால அரசியல் அரங்கு இன்று ஞாயிற்றுக் கிழமை (31.12.2023) கோண்டாவில் உப்புமடச் சந்தியில் அமைந்துள்ள வேதபாராயண சனசமூக நிலையத்தில் பி.ப 3.00க்கு நடைபெறவுள்ளது. பசுமை இயக்கத்தின் தலைவர் பொ.ஐங்கரநேசன் தலைமையில் நடைபெறவுள்ள இவ்வுரையரங்கில் தமிழ் அரசியல் நோக்கு நிலையில் இருந்து என்பதைத் தொனிப்பொருளாகக் கொண்டு உரைகள் இடம்பெறவுள்ளன. வடமாகாணக் கடற்றொழிலாளர் இணையத்தின் தலைவர் என். வி சுப்பிரமணியம் உத்தேச கடற்சட்டத் திருத்த வரைவு என்னும் தலைப்பிலும், அரசியல் ஆய்வாளர் நிலாந்தன் புத்தாண்டை எதிர்கொள்ளுதல் என்னும் தலைப்பிலும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் அரசறிவியல் துறைத் தலைவர் பேராசிரியர் கே.ரி கணேசலிங்கம் இமாலயப் பிரகடனம் என்னும் தலைப்பிலும் தமிழ் அரசியல் நோக்கு நிலையில் இருந்து உரையாற்றவுள்ளார்கள்.

## சமகால அரசியல் உரையரங்கு

**31.12.2023 (ஞாயிறு) பிற்பகல் 3.00 மணி**
**வேதபாராயண சனசமூக நிலையம்**
**உப்புமடச் சந்தி, காங்கேசன்துறை வீதி, கோண்டாவில்**



தலைமையுரை
**திரு. பொ. ஐங்கரநேசன்**
தலைவர் - தமிழ்த்தேசியப் பசுமை இயக்கம்

கருத்துரைகள்

**தமிழ் அரசியல் நோக்கு நிலையில் இருந்து...**



உத்தேச கடற்சட்டத் திருத்த வரைவு
**திரு. என்.வி. சுப்பிரமணியம்**
தலைவர் - வடமாகாண கடற்றொழிலாளர் இணையம்



புத்தாண்டை எதிர் கொள்ளுதல்
**திரு.நிலாந்தன்**
அரசியல் ஆய்வாளர்



இமாலயப் பிரகடனம்
**பேராசிரியர் கே. ரி. கணேசலிங்கம்**
துறைத்தலைவர் - அரசறிவியல் துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

**தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம்**



# அன்பேசிவம் அறக்கட்டளை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நிவாரண உதவி





முல்லைத்தீவு மாவட்டத்தில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட 100 குடும்பங்களுக்கு அன்பேசிவம் அறக்கட்டளை ஊடாக நேற்று (30) உலர் உணவுப்பொதிகள் வழங்கி வைக்கப்பட்டது

சூரிச் அருள்மிகு சிவன் கோவில் சைவத்தமிழ் சங்கம் - அன்பேசிவம் அறக்கட்டளை ஊடாக இயற்கை இடர்கள் ஏற்படும் போதெல்லாம் அவசர நிவாரண உதவிகள் வழங்கப்படுவது வழமை யாகும்.

அவ்வகையில் கடந்த வாரத்தில் ஏற்பட்ட வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட வடக்கு கிழக்கு மாகாண மக்களுக்கு நிவாரண உதவிகள் தொடர்ச்சியாக வழங்கப்பட்டு வருகின்றது.

சுவிஸ் சூரிச் அருள்மிகு சிவன் கோயில் சைவத் தமிழ்ச் சங்கத்தினுடைய நிதி பங்களிப்போடு அன்பே சிவம் அறக்கட்டளையினால் முன்னெடுக கப்பட்டுவரும் குறித்த நிவாரண பணிகளின் 7ஆம் கட்டப்பணியானது முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளரின் வேண்டு கோளிற்கு அமைவாக முத்துஜயன்கட்டுக்குளம் கிராம அலுவலர் பிரிவில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 100 குடும்பங்களுக்கு நேற்று (30) உலர் உணவு பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன

குறித்த நிகழ்வில் முத்துஜயன்கட்டு கிராம பொருளாதார அபிவிருத்தி உத்தியாகத்தர் திரு.செல்வராசா சுதாகர் ராஜா ,கிராம உத்தியோகத்தர் பவிதா பேரின்பராசா மற்றும் கிராம அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், அன்பே சிவம் அறக்கட்டளை யின் தொண்டர்களான சிவானந்தம் சுதாகரன், முருகேசு பிரதீபன் மற்றும் செல்லையா சுஜிதரன் ஆகியோர் கலந்து கொண்டு மக்களுக்கு இந்த உலர் உணவுப்பொதிகளை வழங்கி வைத்தனர்.

ஒவ்வொன்றும் தலா 2000 ரூபா பெறுமதியான நூறு உலருணவு பொதிகளே இவ்வாறு வழங்கி வைக்கப்பட்டது.



# யாழ் ஆயர் புதுவருட வாழ்த்து!

2024ஆவது புதிய ஆண்டு மலருகின்ற வேளை உலகம் முழுவதிலும் இப்புத்தாண்டைக் கொண்டாடும் அனைவருக்கும் இப்புதிய ஆண்டு உங்கள் உள்ளத்து எண்ணங்கள் ஏக்கங்கள் எதிர்பார்ப்புக்கள் அனைத்தையும் நிறைவு செய்யும் இறை ஆசீர் மிக்க ஆண்டாக அமைய முதலில் வாழ்த்துகிறோம்.

2023ஆவது ஆண்டு பல இன்பமான அனுபவங்களையும் பல துன்பமான அனுபவங்களையும் தந்து எம்மை விட்டுக் கடந்து சென்று விட்டது. கடந்த ஆண்டின் அந்த இன்ப அனுபவங்களுக்கு மட்டுமல்ல துன்ப அனுபவங்களுக்கும் இறைவனுக்கு நன்றி சொல்லுவோம். மலரும் புதிய ஆண்டு எப்படி அமையுமோ என்ற ஏக்கமும் இனியதாய் அமைய வேண்டும் என்ற எதிர்பார்ப்பும் எம் எல்லோர் மனதுகளிலும் நிறையவே உண்டு. மலரும் புதிய 2024ஆம் ஆண்டை இறைவேண்டுதல் ஆண்டாக உலகம் முழுவதிலும் கடைப்பிடித்து இறைவேண்டுதலில் முழுமையாக ஈடுபடும்படி திருத்தந்தை பிரான்சீஸ் அவர்கள் அழைப்பு விடுத்துள்ளார். செபம் என்பது ஒரு பலமான ஆயுதமாகும். செபம் என்ற ஆயுதத்தால் அனைத்தையும் அடைய முடியும். அனைத்து பிரச்சினைகளுக்கும் தீர்வுகாண முடியும். உலகில் முடியாதது எனக்கருதப்பட்ட அனைத்து விடயங்களுக்கும் முடிவு காண முடியும். கடந்த ஆண்டின் பல கடின அனுபவங்களின் தாக்கம் இன்னும் எம்மை விட்டு முழுமையாக அகலவில்லை. நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி இன்னும் எவ்வளவு காலம் நீடிக்கப்போகிறது என்ற பயம் முடிவில்லாத பயமாகவே உள்ளது. இறை வேண்டுதல் வழியேதான் இதுபோன்ற எல்லா பிரச்சினைகளுக்கும் தீர்வு காண முடியும் .

இறை வேண்டுதல் ஆண்டான 2024ஆம் ஆண்டு முழுவதும் செபத்தில் நம்பிக்கை வைத்து இறைவேணடுதலில் ஈடுபடும்படி அனைவருக்கும் அன்பு அழைப்பு விடுக்கிறோம்.

இறைவனின் அன்னையும் இறைமக்களின் அன்னையுமான தேவ அன்னை தாய்க்குரிய அன்போடு எம் அனைவரையும் இவ்வாண்டு முழுவதும் பாதுகாத்து வழி நடத்த வேண்டி இறையாசீர் மிக்க வாழ்த்துக்களை தெரிவிக்கிறோம்.

# புலம்பெயர் தேச அமைப்புக்களின் எழுச்சி மீதான ரணிலின் யுத்தமா!



தமிழ் ஈழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் புலம்பெயர் தேசத்தின் பங்களிப்பு என்பது மிகவும் முக்கியமான ஒன்று. நிலத்தில் நடந்த போராட்டத்திற்காக புலத்தில் பல்வேறு வகையிலும் எம் ஈழத் தமிழர்கள் உழைத்தார்கள்.

போராட்டங்களாக இருக்கட்டும், பொருளாதார உழைப்பாக இருக்கட்டும் தாய்நிலத்திற்கா புலம் செய்த பணிகள் என்பவை மகத்தானவை.

அது மாத்திரமின்றி ஈழத் தமிழ் மக்களின் விடுதலை நோக்கிய இலட்சியப் போராட்டத்தை பன்னாட்டு சூழலில் கொண்டு சேர்க்கும் பணியிலும் புலம்பெயர் தேசத்தின் எழுச்சி பெரும் பங்களிப்பை வளங்கி வருகின்றது.

இந்த நிலையில் ஆயுதப் போராட்டத்தை ஒடுக்கிய சிறிலங்கா அரசு புலம்பெயர் தேசத்தின் எழுச்சிகளை ஒடுக்க வியூகங்களை வகுகிறதா என்ற அச்சமே இப்போது மேலிடுகிறது.

## உலகத் தமிழர் பேரவை

இமாலயப் பிரகடனம் இலங்கைத் தீவில் அரசியல் தீர்வொன்றை எட்டுவதற்கான பிரச்சினையும் போராட்டமும் எழுபது ஆண்டுகளை கடந்து நீள்கிறது. இந்த நிலையில் புலம்பெயர் தேசத்தின் தமிழர் அமைப்பான உலகத் தமிழர் பேரவை இலங்கையின் பௌத்த பிக்கு குருமார்களுடன் இணைந்து அரசியல் தீர்வொன்றை காண முனைவதாக சொல்லப்படுகிறது.

அந்த அடிப்படையில் கடந்த காலத்தில் தமிழீழத்தை நோக்கிப் பயணித்த, தமிழீழ விடுதலைப் புலிகளை ஆதரித்த குறித்த அமைப்பு இன்று சிறிலங்கா அதிபர் ரணில் விக்ரமசிங்கவையும் முன்னாள் அதிபர் மகிந்த ராஜபக்சவையும் சந்தித்துள்ளது.

குறித்த அமைப்பின் கீழ் செயற்படும் கனேடிய தமிழ் காங்கிரஸ் போன்ற அமைப்புக்களும் இதில் இடம்பெற்றுள்ளன. இமாலயப் பிரகடனம் என்ற பெயரில் இரு தரப்பும் இணைந்து மேற்கொள்ளப்பட்ட தீர்மானம் குறித்து பல்வேறு சந்தேகங்களும் சர்ச்சைகளும் அரசியல் புலத்தில் தோன்றியுள்ளன. சுய நிர்ணய உரிமையை கைவிடுதல், இனப்படுகொலைக்கான சர்வதேச விசாரணையை கைவிடுதல், சிறிலங்கன் என்ற அடையாளத்திற்குள் தீர்வை ஏற்றுக்கொள்ளுதல் என்ற நிபந்தனைகள் அல்லது விட்டுக்கொடுப்புக்களின் பின்னணியில் தான் இமாலயப் பிரகடனம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அரசியல் ஆய்வாளர்கள் கூறுகிறார்கள்.

அப்படி என்றால் அதற்கு இமாலயப் பிரகடனம் என்று பெயர் சூட்டுவது எப்படிப் பொருத்தமாக அமையும்? மலையின் பெயரால் மடுவை காண்பிக்கும் முயற்சியா இது?

புலம்பெயர் அமைப்புக்களுடன் பௌத்தகுமார்கள் இணைந்து தீர்வு முயற்சி பற்றிப் பேசுவதை வரவேற்க வேண்டும் என்று நடுநிலையாளர்கள் கூறுகின்ற போதும், தாயக தமிழர்களின் பங்களிப்பு இன்றி நடக்கும் இந்த நடவடிக்கைதான் பலவேறு சந்தேகங்களை எழுப்புகிறது.

## தமிழீழத்தை கைவிடும் நிபந்தனையா?

தமிழீழத்தை நாம் கைவிடுகிறோம் என்று உலகத் தமிழர் பேரவை கூறுகிறது, ஆனால் தமிழீழத் தீர்வு எந்தக் காலத்தில் யாரால் முன்வைக்கப்பட்டது என்பதை நாம் அவதானிக்க வேண்டும்.

1976ஆம் ஆண்டு மே 14ஆம் திகதி வட்டுக் கோட்டையில் நடந்த தமிழர் விடுதலைக் கூட்டணியின் மாநாட்டில், ஈழத் தமிழ் மக்களின் இனப்பிரச்சினைக்குத் தீர்வாக தனித் தமிழீழம் அமைக்கப்பட வேண்டும் என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அத்துடன், அந்த தீர்மானத்தை மக்கள் ஆணையாகப் பெறும்பொருட்டு, 1977இல் நடந்த தேர்தலில் மக்கள் பெரு ஆதரவு வழங்கினர். இதன் வாயிலாக தமிழீழத் தீர்வு என்பது தமிழ் ஈழ மக்களின் ஆணையாக வழங்கப்பட்டுள்ளது.

வரலாற்றுச் சிறப்பு மிக்க வட்டுக்கோட்டைத் தீர்மானம், தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் ஆயுதப் போராட்டத்திற்கும் தாக்கமாக அமைந்திருந்தது தனித் தமிழீழ தீர்மானத்தை, புலம்பெயர் தேச அமைப்பொன்று, தாம் விடுவதாக கூறுவதை ஏற்றுக்கொள்வது சிக்கலானதே.

அது குறித்த அமைப்பு சார்ந்த முடிவாக இருக்குமே தவிர, தமிழ் மக்களின் தீர்மானமாக இருக்க இயலாது.

இதேவேளை, கடந்த காலத்தில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு, தனிநாட்டுக்கோரிக்கையை – தமிழீழத்தை கைவிடுவதாகவும் சுயநிர்ணய உரிமை கொண்ட தீர்வை, பிளவுபடாத இலங்கைக்குள் முன்வைக்குமாறும் கோரிய போதும்கூட 2009 இனப்படுகொலைக்குப் பிந்தைய காலத்தில் சிறிலங்கா அரசு அதனை சற்றும் கவனம் கொள்ளவில்லை.

இந்த நிலையில்தான் தாயக தலைவர்களை புறந்தள்ளிவிட்டு எப்படியான தீர்வு முயற்சியை சிறிலங்கா அரசு தரப் போகிறது என்ற சந்தேகம் எழுகிறது.





மிகுதி 07 ஆம் பக்கத்தில்...

# புலம்பெயர் தேச அமைப்புக்களின் எழுச்சி மீதான ரணிலின் யுத்தமா!

## தலைவர் பிரபாகரனின் கோரிக்கை

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் தன் செயலாலும் அமைதியாலும் புன்னகையாலும் வருடத்திற்கொரு முறை நிகழ்த்தும் உரையாலும் இலட்சியம் நோக்கி ஈழ மக்களை பயணிக்கச் செய்தவர் மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரன்.

இந்த நிலையில் மக்கள் ஆணை வழியாக பெறப்பட்ட,



அவர்மீது கொண்ட நம்பிக்கைமிகு பேரன்பினாலும் தாயக விடுதலைமீது கொண்ட பெருந் தாகத்தினாலும் புலம்பெயர் தேச மக்கள் அங்கிருந்து பல்வேறு வகையான செயற்பாடுகளையும் உழைப்புக்களையும் முன்னெடுத்தார்கள்.

களத்தில் தமிழீழ விடுதலைப் போராட்டம் நடந்த காலத்தில், புலம்பெயர் மக்கள் பனியிலும் நெருப்பிலும் உழைத்த உழைப்பு விடுதலைப் போராட்டத்தை தாங்கி நகர்த்தியது என்பதை யாவரும் அறிவோம்.

இந்த நிலையில், ஈழத் தமிழ் மக்களின் விடுதலை மற்றும் உரிமை குறித்தும் இன ஒடுக்குமுறையை தடுக்கும் நீதி குறித்தும் புலம்பெயர் தேசத்தில் முன்னெடுக்கும் செயற்பாடுகளும் போராட்டங்களும் பன்னாட்டுச் சூழலில் பெரும் புரிதல்களை ஏற்படுத்தி அரசியல் மாற்றங்களை நிகழ்த்தக் கூடியவை.

இதனால் 2008 மாவீரர் தின உரையின் போது ஈழத் தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தை தொடர்ந்து தாங்கிச் செல்ல புலம்பெயர் தேசங்கள் மீது மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரன் அழைப்பு விடுத்திருந்தார்.

அத்துடன் இளைய சமூகத்தினரை குறிப்பாக அழைத்து பொறுப்பேற்க வேண்டும் என்றும் தலைவர் அழைப்பு விடுத்தமை, புலம்பெயர் தேசத்தின் எழுச்சியின் அவசியத்தை உணர்த்துகின்ற கால முக்கியத்துவம் வாய்ந்த நகர்வாகும்.

## புலம்பெயர் அமைப்புக்களை சிதைக்கவும் அழிக்கவுமா?

தாயகத்தில் உள்ள தமிழ் தரப்புக்களை சிதைப்பதில் சிறிலங்கா அரசு வெற்றி கண்டு வருகின்றது. குறிப்பாக 2002 சமாதான ஒப்பந்த காலத்தில் விடுதலைப் புலிகள் தீர்வை சமாதானத்தின் வழியாக முன்வைக்க ஒரு வாய்ப்பை திறந்தபோது, சிறிலங்கா அரசு தன்னை போருக்குத் தயார்படுத்தியதுடன், விடுதலைப் புலிகளை பலவீனப்படுத்தும் செயற்பாடுகளிலும் ஈடுபட்டது.

அதன் அடிப்படையில்தான் கருணா அம்மான் விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இருந்து பிரிந்து செல்லும் நிலை உருவாக்கப்பட்டது.

இதனை தான் பெற்ற போர் வெற்றியாகவே அன்றைய பிரதமரும் இன்றைய அதிபருமான ரணில் கூறுவதை பார்த்திருக்கிறோம்.

அதேபோன்று 2015இல் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவை பெற்றதுடன் அக் கட்சிக்குள் சில பிளவுகளை உருவாக்கவும் ரணில் காய்களை நகர்த்தியிருந்தார்.

இந்த நிலையில் புலம்பெயர் தேச அமைப்புக்களை சிதைக்கவும் அழிக்கவுமான அடுத்த யுத்தத்தை ரணில் தொடங்கியுள்ளாரா? அதுதான் இமாலயப்



பிரகடனமா? உலகத் தமிழர் பேரவைமீது புலம்பெயர் தேச மக்களும் தாயக மக்களும் பல்வேறு அதிருப்திகளையும் எதிர்ப்புக்களையும் வெளிப்படுத்தத் துவங்கியுள்ளனர்.

அதேபோன்று கனேடியத் தமிழ் காங்கிரஸ் போன்றவையும் சிக்கலை எதிர்நோக்கத் துவங்கியுள்ளன.

இப்படியான செயற்பாடுகள் வழியாக புலம்பெயர் தேசத்தில் அனைத்து தமிழர் அமைப்புகள்மீதும் மக்களின் எதிர்ப்பை ஏற்படுத்துவதான் ரணில் அரசின் இலக்கா?


இந்த அரசியலை புரிந்துகொண்டு புலம்பெயர் தேச அமைப்புக்கள் தமிழர்களுக்கான இலட்சியத் தீர்வுக்கும் இனவழிப்புக்கான நீதிக்குமாக தமது பயணத்தை செழுமைப்படுத்த வேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.

-தீபச்செல்வன்-




# சவேந்திர சில்வாவை தடை செய்ய பிரித்தானியாவில் தொடரும் முயற்சிகள்!

## பிரித்தானியா எம்.பி சாரா சுல்தானா உடனான இராஜதந்திர சந்திப்பு!



இலங்கை இராணுவத்தளபதி ஜெனரல்சவேந்திர சில்வா உள்ளிட்ட யுத்தகுற்றவாளிகளை பிரித்தானியாவின் உலகளாவிய மனித உரிமைகள் தொடர்பான தடைவிதிப்பு அதிகாரசபையின் கீழ் (Global Human Rights Sanction Regime) தடைசெய்வதற்கு பிரித்தானிய அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென வலியுறுத்தி, பிரித்தானியாவின் கோவென்ட்ரி தெற்கு (Coventry South) பகுதி பாராளுமன்ற உறுப்பினர் மதிப்பிற்குரிய சாரா சுல்தானா எம்.பி (Hon. Zarah Sultana) அவர்களுடன் இராஜதந்திர சந்திப்பு ஒன்று கடந்த வியாழக்கிழமை (07/12/2023) மதியம் 12.00 மணியளவில் மெய்நிகர் வழியாக இடம்பெற்றுள்ளது.

சட்ட ஆலோசகரும் மனித உரிமைசெயற்பாட்டாளுமான திரு கீத் குலசேகரம் அவர்கள் தலைமையில் இடம்பெற்ற இந்த முக்கிய சந்திப்பில், இனப்படுகொலையை தடுப்பதற்கும் தண்டிப்பதற்குமாக சர்வதேச மையத்தின் (ICPPG) சார்பில் திரு. றோய் ஐக்ஷான் கலந்துகொண்டார். அத்துடன் இனப்படுகொலையின் நேரடி சாட்சியங்கள் மற்றும் சித்திரவதையால் பாதிக்கப்பட்டவர்களான பாவிலன் ஐயம்பிள்ளை, மல்ஷன் சுதர்ஷன், கனகசபாபதி கார்த்திகேசன், அமல்ராஜ் ஜெயக்குமார், மற்றும் ராஜேஸ்வரன் ஜனார்த்தனன் ஆகியோரும் கலந்துகொண்டு, தங்கள் அனுபவங்களை பகிர்ந்துகொண்டனர்.


கீத் குலசேகரம் அவர்கள் தனது தலைமை உரையின் போது, இலங்கையில் இடம்பெறும் இனப்படுகொலைக்கு வரலாற்று ரீதியாக பிரித்தானியாவே பொறுப்பு என்பதை விளக்கி, தமிழ்மக்களுக்கு நீதி வழங்க வேண்டிய கடமைப்பாட்டையும் எடுத்துரைத்தார். ஐவுதீ மற்றும் ஐஊீபு ஆகிய அமைப்புக்கள் பிரித்தானிய வெளிவிவகார அமைச்சிற்கு (FCDO) போதுமான ஆதாரங்களை சமர்பித்த போதும் இன்னும் உரிய நடவடிக்கை எடுக்க தவறியிருப்பதனை சுட்டிக்காட்டினார். அத்துடன் இறுதி யுத்தத்தில் இடம்பெற்ற யுத்த குற்றங்கள் மட்டுமன்றி, தற்போது இலங்கையில் தொடரும் ஆள்கடத்தல் மற்றும் சித்திரவதைகளும் சவேந்திர சில்வாவின் கட்டுப்பாட்டில் உள்ள ஆயுத படைகளே மேற்கொண்டுவருவதால் அதற்கும் சவேந்திர சில்வாவே பொறுப்பு என்றும், சந்திப்பில் கலந்துகொண்ட சித்திரவதைக்குள்ளானவர்கள் இதற்கு நேரடிசாட்சி என்றும்தெரிவித்தார்.

சவேந்திர சில்வா யுத்தகுற்றங்களில் ஈடுபட்டிருபதை ஐக்கிய நாடுகள் சபையின் அறிக்கையில் குறிப்படப்பட்டிருப்பதையும், அவர்மீது ஏற்கனவே அமெரிக்கா, கனடா பயணத்தடை விதித்துள்ளதையும் எடுத்துக்காட்டிய அவர், அமெரிக்கா, கனடாவின் வழியை பின்பற்றி பிரித்தானியாவும் தடை விதிக்கவேண்டும் என்று கோரி பிரித்தானிய புலம்பெயர் தமிழ் செயற்பாட்டாளர்கள் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுவருகின்றனர் என்பதையும் விவரித்தார்.

கருத்துக்களையும் உள்வாங்கிய பாராளுமன்ற உறுப்பினர் தனது சந்தேகங்களை கேட்டு தெளிவடைந்துடன், ஈழத் தமிழர்களின் கோரிக்கையையும் ஆதங்கத்தையும், தனது பகுதியில் வாழும் பாதிக்கப்பட்டவர்கள் சார்பில் தான் பிரித்தானிய அரசிற்கு எடுத்துரைப்பதாகவும், FCDO இதுவரை நடவடிக்கை எடுக்காமைக்கு காரணத்தை கேட்டு கடிதம் அனுப்புவதாகவும் வாக்களித்தார். அந்துடன் திரு. கீத் குலசேகரம் கேட்டுக்கொண்டபடி தமிழருக்கான அனைத்துக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் குழு (APPGT) மற்றும் மக்நெட்ஸ்கை தடைகளுக்கான அனைத் துக்கட்சி பாராளுமன்ற குழுக்களில் (APPG for Magnitsky Sanctions) இணையவும், FCDO விற்கு தமிழ்மக்கள் சார்பில் இராணுவத்தளபதி சவேந்திர சில்வாவினை தடைசெய்யக் கோரி தன்னாலான வகையில் அழுத்தம் கொடுப்பதாகவும் வாக்களித்தார்.

# கடல்சார் பாரம்பரியமே தலைவர் பிரபாகரனுக்குப் பேராண்மையைப் பெற்றுத் தந்தது!

## கடற்கோள் நினைவு நாளில் பொ.ஐங்கரநேசன் சுட்டிக்காட்டு





**கடல் வாழ்க்கை, நில வாழ்க்கையைவிடச் சவால் கள் நிறைந்தது. கடலில் போனால் திரும்பி வருவோமா என்று தெரியாத நிச்சயமற்ற வாழ்க் கை மரணபயத்தை அறவே இல்லாததாக்கியது.**

சூறைக் காற்றுக்கும் கொந்தளிக்கும் அலைகளுக் கும் எதிராக மேற்கொள்ளும் பயணம் பெரும் பயிற்சியாக அமைந்து உடலையும் மனதையும் வலுவாக்கியது. நிச்சயமற்ற வருவாய் பொருள் இழப்புக் குறித்த கவலையை இல்லாமல் ஒழித்தது. இக்கடல்சார் பாரம்பரிய குணவியல்புகளுடன் இலட்சிய உறுதியும் சேர்ந்து தலைவர் பிரபாகர னுக்குப் பேராண்மையைப் பெற்றுத் தந்தது.

அவரால் கடலையும் நிலத்தையும் குறிப்பிட்ட காலம் வரையிலேனும் கட்டிக்காக்க முடிந்தது.

இன்று அவர் இல்லாத நிலையில் சூறையாடப்படும் கடலைப் பாதுகாக்கவேண்டிய பெரும் பொறுப்பு நெய்தல் நில மக்களிடமே உள்ளது என்று தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் சுட்டிக்காட்டியுள்ளார்.

தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் கடற்கோள் நினைவுநாள் நிகழ்ச்சி மாதகல் விநாயகர் இறங்குதுறை யில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே பொ. ஐங்கரநேசன் இவ்வாறு சுட்டிக்காட்டியுள்ளார். அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், பூமியின் வெப்ப நிலை மிக உயர்வாக இருந்த ஆண்டாக நடப்பு 2023 ஆம் ஆண்டு பதிவாகி உள்ளது. வரவிருக் கும் 2024 ஆம் ஆண்டில் பூமியின் வெப்பநிலை கைத்தொழில்புரட்சி ஆரம்பமானபோது இருந்ததைவிட 1.5 பாகை செல்சியஸ் அளவில் உயரும் என்று விஞ்ஞானிகளால் எதிர்வுகூறப்பட்டுள்ளது. இது பூமியின் காலநிலையில் கடுமையான மாற்றங்களை ஏற்படுத்தும் என்று அஞ்சப்படுகிறது. பூமி சூடாகுவதால் காலநிலையில் ஏற்பட்டுவரும் மாற்றங்களால் நாம் ஏற்கனவே ஒருபுறம் கடும் மழையும் வெள்ளப்பெருக்கும், இன்னொருபுறம் கடும் வரட்சி, பனிமலைகளின் உருகுதல், கடல்மட்ட உயர்வு, பயிர் உற்பத்தி பாதிப்பு, உயிரினங்களின் அழிவு என்று பல பாதகங்களை அனுபவிக்க ஆரம்பித்துவிட்டோம்.

பூமியின் காலநிலையில் நிலத்தைவிட கடல் ஆற்றுகின்ற பங்களிப்புப் பெரியது. பூமியின் மீது சூரியனில் இருந்து வீழுகின்ற வெப்பத்தின் பெரும் பகுதியைக் கடல்தான் உறிஞ்சிவைத்திருக்கிறது. உறிஞ்சிய வெப்பத்தைச் சமுத்திர நீரோட்டங்களின் மூலம் பூமி முழுவதும் சமனாகப் பரவச்செய்கிறது. பூமியைச் சூடுபடுத்தும் கரியமில வாயுவைத் தன்னுள் ஈர்த்துக் கரைத்துவைத்திருக்கும் மிகப்பெரும் காபன் தொட்டியாகச் செயலாற்றுகிறது. கடல்தான் பூமியின் சூட்டைத் தணிவிக்கும் மழை பொழிவதற் குக் காரணமாகவும் உள்ளது. ஆனால், கடலின் இருப்பும் உயிர்ப்பும் தான் எமது இருப்பும் உயிர்ப் பும் என்று தெரியாத நாம் கடலை மெல்ல மெல்லச் சாகடித்துக் கொண்டிருக்கிறோம்.

எமது பொருத்தமற்ற மீன்பிடி முறைகளாலும் அளவுக்கு அதிகமான மீன்பிடியாலும், கடலட்டை வளர்ப்புப் போன்ற ஒற்றையினப் பண்ணை களாலும் கடலில் மீன் இனங்கள் அழிந்து வருகின்றன.

கடலில் மீன்களை விடப் பிளாஸ்ரிக் துகள்களே அதிகமாகக் காணப்படுகின்றன. கடலில் அதிக அளவில் பிளாஸ்ரிக்கைத் தள்ளிக் கொண்டி ருக்கின்ற நாடுகளின் பட்டியலில் இலங்கை 14ஆவது இடத்தில் உள்ளது. கடலை எமது கழிவுகளைக் குவிக்கின்ற ஒரு குப்பைத் தொட்டியாகவே நாம் பாவித்துக்கொண்டிருக் கின்றோம். சூழல்மாசுபாட்டால் ஒட்சிசன் குறைவு ஏற்பட்டுப் பல இடங்களில் கடல் இறக்கத் தொடங்கியிருப்பதாகக் கடலியல் ஆய்வாளர்கள் கண்டறிந்துள்ளார்கள்.

கடல்தான் காநிலைமாற்றப் பாதகங்களைத் தடுக்கும் கேடயம் என்பதை உணர்ந்து கடற்சூழற் பாதுகாப்புக்கு முன்னுரிமை கொடுக்கவேண்டும். கடலைப் பாதுகாக்க வேண்டிய கடப்பாடு அனைத்து மக்களுக்கும் உண்டு. ஆனாலும் கடலின் பங்காளிகளான, கடலையே வாழ்வாதாரமாகக் கொண்ட கடற்றொழிலாளர்க ளுக்கு இந்தக் கடப்பாடு அதிகமாகவே இருக்கிறது. அதற்கான பட்டறிவும், பராக்கிரமும் இவர்களிடம்தான் அதிகளவில் இருக்கிறது.

**கடற்சூழலைப் பாதுகாக்கும் நடவடிக்கைகளை அவசரப் பணியாக விரைந்து மேற்கொள்வதே பூமியில் எமது இருப்புக்கான உத்தரவாதமாக அமையும். இதுவே, கடற்கோளில் பலியான எம் உறவுகளுக்கு நாம் செலுத்துகின்ற உண்மையான அஞ்சலியாகவும் இருக்கும் என்றும் தெரிவித்துள்ளார்.**

அரச அங்கீகாரம் பெற்ற வடமாகாணத்தின் முதல்தர கனரக வாகனப் பயிற்சிப் பாடசாலை.




# கிருபா லேணர்ஸ்

## කිරුබා ලෑර්නර්ස් KIRUBAA LEARNERS

- குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் விரைவான சாரதி அனுமதிப்பத்திரம்.
- எழுத்துப்பரீட்சைக்கு விசேட வீதி ஒழுங்கு வகுப்புக்கள்
- அசோக் லேடன் பஸ் மூலமான கனரக வாகனப் பயிற்சி
- மும்மொழிகளிலும், உங்களுக்கு விரும்பிய நேரங்களிலும் வாகன பயிற்சிகள்.
- சகல கிளைகளிலும் பயிற்சி வகுப்புக்கள்.
- தவணைமுறையில் கட்டணங்கள்.
- இரவிலும் வாகனப் பயிற்சிகள்.




| | | | | |
|---|---|---|---|---|
| **தலைமையகம்** 226, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் 021 222 4353 0777 22 5292 | சுன்னாகம் 021 224 2022 | நெல்லியடி 021 226 0700 | பருத்தித்துறை 021 226 1100 | பூநகரி 021 320 1818 |
| | ஆவரங்கால் 021 222 6688 | சித்தங்கேணி 021 225 2500 | சாவகச்சேரி 021 227 0700 | மன்னார் 023 225 1656 |
| | முழங்காவில் 021 300 6544 | கிளிநொச்சி 021 228 5505 | விஸ்வமடு 021 320 1515 | வவுனியா 024 222 7777 |


# புலமைப்பரிசில் மாணவர்களுக்கான விசேட மாதிரி வினாத்தாள் பதிப்பு!

(அனுபவம் மிக்க ஆசிரியர்களினால் தயாரிக்கப்பட்டது)

## எதிர்வரும் தை மாதம் முதல்....

உங்கள் தேசியம் பத்திரிகையில்
வார இதழ்களாக வெளிவரவிருக்கின்றன.

தரம் 4 மற்றும் 5




வார இதழ் தேசியம் 077 1499094